### தே.மு.தி.க. நிறுவனர்

# கேப்டன் விஜயகாந்த் நினைவு நாள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைத்தளப் பதிவு!

சென்னை, டிச. 29-

தேசிய முற்போக்கு திராவிடக் கழக நிறுவனத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் நினைவுநாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**‘கேப்டன்’ விஜயகாந்த் நினைவுநாள், ஏழை மக்கள் மீது பெரும் பரிவு கொண்டு, அனைவருக்கும் உதவும் தன் உயர்ந்த உள்ளத்தால் தமிழ் மக்களின் அளவில்லாத அன்பைப் பெற்ற எனது அருமை நண்பர் தே.மு.தி.க. நிறுவனர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் நற்பணிகளை நினைவு கூர்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.12.2025) கேப்டன் விஜயகாந்த் அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை, கோயம்பேட்டில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தே.மு.தி.க. பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த், பொருளாளர் எல்.கே.சுதீஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

### திருவண்ணாமலை மாவட்டம் – இராஜந்தாங்கல் கிராமத்தில்

### நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த

# மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

திருவண்ணாமலை. டிச.29-

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னா த்தூர், இராஜந்தாங்கல் கிராமத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்தின ருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னா த்தூர் வட்டம், இராஜந்தாங்கல் கிராமத்தில் கடந்த 24.12.2025 அன்று காலை சுமார் 11.30 மணியளவில் திருவண்ணாமலையிலிருந்து விழுப்புரம் நோக்கி சென்று கொண்டிருந்த நான்கு சக்கர வாகனம் ஒன்றும், பாண்டிச்சேரியிலிருந்து பெங்களூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தும் எதிர்பாராதவிதமாக நேருக்குநேர் மோதிக்கொண்ட விபத்தில் நான்கு சக்கர வாகனத்தில் பயணம்செய்த திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், வேங்கிக்கால், பாலகிருஷ்ணன் நகரைச் சேர்ந்த திருமதி.கனகவள்ளி (வயது 38) க/பெ.சக்திவேல் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மேலும், காயமடைந்து சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த தண்டரை கிராமம், பிள்ளையார் கோவில் தெருவைச் சேர்ந்த திருமதி.பவுனம்மாள் (வயது 75) க/பெ.சீனுவாசன் மற்றும் வேங்கிக்கால், தென்றல் நகரைச் சேர்ந்த திரு.கலைவாணன் (வயது 62) த/பெ.இராஜசேகரன் ஆகிய இருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழுந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தின ருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

## ஸ்டிக்கர்பாடி...



சசிகலா காலில் விழுந்து
கை மாத்தா வாங்குன
கட்சியின் மீது
“அதிபர் எடப்பாடி” ன்னு
ஸ்டிக்கர் ஒட்டுன யோக்கியன்
தானே நீ…
“மீசை வச்ச ஆம்ளயா இருந்தா
வேட்டி கட்டுன ஆம்பளயா
இருந்தா வா” ன்னு ஏகத்துக்கும்
கூவிப்புட்டு அடுத்து வந்த இடைத்தேர்தல்களில்
களத்துக்கே வராம கம்பி நீட்டிய தொடை நடுங்கி
நீ தானே..

மிஸ்டர் முகமூடி

நீ பேரு மட்டும் வச்சிப்புட்டு
சோறு வைக்காம
கம்பி நீட்டுன பல திட்டங்களுக்கும் சேர்த்தே உயிர் கொடுத்தது
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின்
திராவிட மாடல் ஆட்சி தான்..

அதுக்கு பேரு ஸ்டிக்கர் ஒட்டுறது கெடையாது..

அது வன்மம் இல்லாத பொறுப்புணர்வு..

அப்படிப் பார்த்தா தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட
கோயம்பேடு மார்க்கெட் தொடங்கி பன்நோக்கு
மருத்துவமனை வரை எண்ணற்ற
பல திட்டங்கள் ஏராளமான
பாலங்கள் பலவும்
தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டு அ.தி.மு.க.
ஆட்சியில் ரிப்பன் வெட்டப்பட்டது தானே..

இதெல்லாம் உமக்கு எங்கே விளங்கப் போகுது..

சார்வாள்
நீங்களே கம்பராமாயணத்தை
சேக்கிழார் பேர்ல ஸ்டிக்கர் ஒட்டிய மேதை அல்லவோ…

என்னநாஞ்
சொல்றது!



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்

### ஒட்டன்சத்திரம் தொகுதி – போடுவார்பட்டியில்

# என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அர.சக்கரபாணி பங்கேற்பு!

*ஒட்டன்சத்திரம்.டிச. 29.*

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி போடுவார் பட்டியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் அர. சக்கர பாணி பேசினார்.





திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி போடுவார் பட்டி ஊராட்சியில், நடைபெற்ற என்வாக்குச்சாவடி வெற்றிவாக்குச்சாவடி ஆலோசனைக் கூட்டத்திற்கு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமை வகித்து, தமிழ்நாடு அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி 2026 சட்டமன்றத் தேர்தலில் பணியாற்றும் விதம் குறித்து எடுத்துரைத்தார் .

இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் இராஜாமணி, தொகுதி பார்வையாளர் பரணிமணி, ஒன்றிய செயலாளர் பொன்ராஜ், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணசாமி உள்ளிட்ட முன்னாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் வாக்குச்சாவடி முகவர்கள் கலந்து கொண்டனர்.

### கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி தலைமையில்


# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கோவை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு!

## மாவட்டப் பொறுப்பாளர் துரை செந்தமிழ் செல்வன் - செயலாளர்கள் தொண்டாமுத்தூர் அ.ரவி, தளபதி முருகேசன் அறிக்கை!

*கோவை, டிச. 29-*

*தமிழ் மண், மொழி, மானம் காக்க ஓய்வறியாமல் உழைத்து, தமிழ்நாட்டு மக்களுக்காக பொன்னான திட்டங்களை செயல்படுத்தி, பொற்கால ஆட்சி நடத்தி வரும் திராவிட சூரியன், திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பல்லடத்தில் நடைபெறும் “வெல்லும் தமிழ்ப்பெண்கள்” மேற்கு மண்டல மாநாட்டில் கலந்து கொள்ள இன்று (29.12.2025 - திங்கட்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையம் வருகை தர உள்ளார்.*







*இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகை தரும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி. செந்தில்பாலாஜி அவர்களின் தலைமையில், ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் மாபெரும் பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப் படுகிறது என்று கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.*

*அதுசமயம், இவ்வரவேற்பு நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், தலைமைக் கழக நிர்வாகிகள், துணை மேயர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி கழக, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், அனைத்து கழகத் தொண்டர்கள், BLA2, BDA பூத் கமிட்டி நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் என்று தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.*



மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதி புதூர் பகுதியில் ”என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பகுதி கழகச் செயலாளர் N.M.புண்ணியமூர்த்தி முன்னிலையில் நிகழ்ச்சி ஏற்பாடு 10வது வட்டச் செயலாளர் V.C.மாதவன் வரவேற்பில் 85வது பாகம் முரசொலி நரசிம்மன்(BLA2) மாவட்ட செயலாளர் கோ.தளபதிMLA தலைமை தாங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்து மத நல்லிணக்கம் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன்MLA, துணைச் செயலாளர் மூவேந்திரன்,இரட்சணியபுரம் சர்ச் பாஸ்டர் ஜேக்கப் , ஆறுமுகம், கேபிள் கேசவன், பிரசன்னா,சித்திக் அமீன்,சுரேஷ் பாபு காளீஸ்வரன், சிக்கந்தர், ஷேக் அப்துல்லா,காட்டுராஜா, செந்தில்குமார், தீபா,பிரபாகரன் IT, கார்த்திக் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர், நரிமேடு பகுதி கிருஷ்ணாபுரம் காலனி பகுதியில் நடைபெற்ற என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவடி தேர்தல் பரப்புரை கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் – கழக உயர்நிலை செயற்திட்டகுழு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம், பகுதி செயலாளர் வழக்கறிஞர் சரவணன் அம்பலம் தலைமையில் சிறப்புரையாற்றினார், இக்கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர் ஜெயராஜ், வட்ட கழக செயலாளர் சுரேஷ் உள்ளிட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.